**SC.NO.94/2023** **Date: 10.10.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திருமதி.பவானி என்ற **Pw3** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachiyappan, Junior Assistant,** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் – திரு.பவானி

த/பெ, – கிருஷ்ணன்

வயது – **28/2025**

தொழில் – வழக்கறிஞர்

முதல் விசாரணை:

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம், நீர்வள்ளூர் கிராமம், சுண்ணாம்புகுட்டை தெரு, கதவு எண்.110 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் காஞ்சிபுரத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த நபர் எனது தாத்தா கோவிந்தன். அரசு தரப்பு சாட்சிகளான கிருஷ்ணன், பவித்ரா, குமாரி, சதீஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். முதலில் எனது அக்கா பவித்ரா திருமணம் முடிந்து விநாயகபுரம் என்ற கிராமத்தில் குடியிருந்தார்கள். எனது அக்காவிற்கும் அவரது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு எனது அக்கா பிரிந்து வந்து சுங்குவார்சத்திரம், கருமாரியம்மன் தெருவில் வாடகை வீட்டில் இருந்தார்கள். எனது அக்காவிற்கு ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளார். எனது அம்மாவும் எனது தங்கையும் சம்பவம் நடப்பதற்கு 3 வருடங்களுக்கு முன்பு எனது அப்பாவுடன் சண்டையிட்டு காஞ்சிபுரத்தில் தனியாக உள்ளார்கள். நான் அப்போது எனது அக்கா பவித்ராவுடன் சுங்குவார்சத்திரத்தில் இருந்தேன். எதிரி பாட்சா எங்களுடைய உறவினர்

என்பதால் அடிக்கடி எனது அப்பா வசித்த வீட்டிற்கு வந்து போவார். எதிரி பாட்சாவும் எனது அப்பாவுடன் சேர்ந்து வேலை செய்ததால் எனது அப்பா கட்டிட கான்ட்ராக்ட் வேலை எடுத்து செய்வதற்கு பணம் வைத்திருப்பது அவருக்கு தெரியும். சம்பவத்திற்கு முன்பு 15 நாட்களுக்கு முன்பாக நானும் எனது அக்காவும் எனது அப்பாவின் வீட்டில் தான் இருந்தோம். அப்போது பாட்சா எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்போது எதிரியின் கல்யாணத்திற்கு பெண் பார்த்திருப்பதாகவும் கல்யாணத்திற்கு பணம் தேவைபடுவதாகவும் பணம் இருந்தால் கொடுங்கள் என்று எனது அப்பாவிடம் கேட்டுள்ளார். எனது அப்பா நான் ஒரு வீடு கட்டுவதற்கு கான்ட்ராக் எடுத்துள்ளேன், அதற்காக பணம் வாங்கி வைத்துள்ளேன், அதை தவிற வேறு பணம் இல்லை என்று அவரிடம் கூறிவிட்டார். அதற்கு எதிரி எனது அப்பாவிடம் பணம் வைத்துக்கொண்டு இல்லை என்று சொல்கிறாய் என்று கோபித்துக்கொண்டு சென்றுவிட்டார். அதன் பிறகு எதிரி எங்கள் வீட்டிற்கு வரவில்லை. சம்பவ தேதியான 06.04.2023 அன்று நானும் எனது அக்காவும் எங்கள் வீட்டிற்கு போகும் போது எனது அப்பாவிற்கு போன் செய்து எங்கே உள்ளார் என்று கேட்டதற்கு நான் வேலைக்கு போய்விட்டு மாலை 06.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிடுவேன் என்று சொன்னார். நாங்கள் இருவரும் பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டோம். அதன் பிறகு மாலை 06.30 மணியளவில் நீர்வள்ளூரில் உள்ள எனது அப்பா வீட்டிற்கு சென்றோம். எங்களுக்கு முன்பாக எனது அப்பாவும் வீட்டிற்கு சென்றார். எனது அப்பா வீட்டிற்கு போகும் போது வீட்டிலிருந்து எதரி வேகமாக ஓடினார். எனது அப்பா எதிரியிடம் என்னடா இத்தனை நாட்களா ஆளை காணோம் என்று கேட்டார். ஆனால் எதிரி தாத்தாவை பார்க்க வந்ததாக சொல்லிவிட்டு யாரையும் பார்க்காமல் நிற்காமல் சென்றுவிட்டார்.

எனது தாத்தா வீட்டின் சாவிணை அவருடைய பாக்கட்டில் தான் வைத்திருப்பார். ஆனால் அப்போது சாவி கீழே விழுந்துகிடந்தது. எனது தாத்தாவை எழுப்பினோம், ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை. அவருடைய கழுத்தில் நகம் பதிந்திருந்தது. எனது அப்பா வீட்டின் மெயின் டோரை துறந்து உள்ளே சென்று பார்த்த போது பெட்ரூம் கதவு பூட்டு உடைக்கப்பட்டும் அதன் உள்ளே இருந்த பீரோவின் கதவும் உடைக்கப்பட்டும் அதிலிருந்த நகை மற்றும் பணம் திருடப்பட்டிருந்தது. அந்த பீரோவில் எனது அப்பா ரூபாய் 3 லட்சத்து 69 ஆயிரத்து 800 மற்றும் எங்களுடைய செயின் 2, பிரேஸ்லேட் ஒன்று, ஆரம் இரண்டு, நெக்லஸ் 1, மோதிரம் 4, கம்மல் ஒரு ஜோடி ஆகியவை காணாமல் போயிருந்தது. எனது தாத்தாவை பார்த்த போது அவரது வாயில் புளூ கலர் தண்ணி வழிந்ந நிலையில் இருந்தது. கொக்கு மருந்தை மதுவில் கலந்து கொடுக்கப்பட்டிருந்தது. எனது தாத்தா இறந்த நிலையில் இருந்தார். இது குறித்து நான் போலிசாருக்கு தகவல் சொன்னேன். போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். இது சம்மந்தமாக புகாரை எனது அப்பா மறுநாள் காலை காவல் நிலையத்திற்கு சென்று கொடுத்தார். இது சம்மந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகாரை நான் தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் காஞ்சிபுரத்தில் வழக்கறிஞராக பயிற்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது தொழில் சம்மந்தமாக அடிக்கடி காவல் நிலையத்திற்கு சென்று வருவேனா என்றால் காவல் நிலையத்திற்கு செல்லமாட்டேன், நீதிமன்றத்திற்கு மட்டும் தான் செல்வேன். கிருஷ்ணன், பவித்ரா, குமாரி,

சதீஷ் ஆகியோர்களில் என்னுடைய உறவினர்கள் யார் என்றால் கிருஷ்ணன் என்பவர் எனது தகப்பனார், பவித்ரா எனது அக்கா, குமாரி என்பவர் எங்கள் பக்கத்து வீட்டுகாரர், சதீஷ் என்பவர் எங்களுடைய முன்னாடி தெருவில் வசிப்பவர். எதிரி பாட்சாவும் எனது அப்பாவும் ஒன்றாக கட்டிட வேலைக்கு செல்வார்கள் என்ற விவரத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில் எவ்வளவு பணம் எனது அப்பாவிடம் கேட்டார் என்றால் சம்பவ காலத்திற்கு 15 நாட்களுக்கு முன்பு கேட்டார், எவ்வளவு பணம் என்று தெரியாது. எதிரி பணம் கேட்ட விவரம் சம்பத்தன்று எனது அப்பா சொல்லி தான் தெரியும் என்றால் முன்பே சொல்லியிருக்கிறார், நாங்கள் அப்போது அங்கு இருந்தோம். தேதியை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் எனக்கு தேதி தெரியவில்லை. சம்பவத்தன்று சுங்குவார்சத்திரத்திலிருந்து மாலை எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் சுமார் 05.30 மணிக்கு மேல். சுங்குவார்சத்திரத்திலிருந்து காஞ்சிபுரம் வர எத்தனை கி.மீ என்றால் 22 கி.மீ. சம்பவம் குறித்து நான் போலிசாருக்கு தகவல் கொடுத்த நேரம் என்ன என்றால் 06.30 மணி இருக்கும். எனது தாத்தாவை குளிர்சாதன கண்ணாடி பெட்டியில் வைப்பதற்கு முன்பு அவருடைய கைகள் மடக்கிய நிலையில் விரைப்பாக இருந்தது என்றால் நான் பார்க்கவில்லை. எனது தகப்பனார் மற்றும் எனது அக்கா தாத்தாவின் கைகள் மடக்கியிருந்தது என்ற விவரம் என்னிடம் சொன்னார்களா என்றால் சொன்னார்கள். காவல் துறையினர் வந்து விசாரணை தொடங்குவதற்கு முன்பு எனது தாத்தாவை குளிர்சாதன கண்ணாடி பெட்டியில் வைப்பதற்கான காரணம் என்ன என்றால் கொக்கு மருந்தால் வாசனை வந்தது, அதனால் குளிர்சாதன கண்ணாடி பெட்டியில் வைத்தோம், உடனே போலிசார் வந்து எடுத்துட்டு போயிட்டாங்க.

சம்பவத்தன்று எத்தனை மணிக்கு காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் 07.00 மணிக்கு வந்தார்கள். காவல் துறையினர் வரும் போது எதிரி பாட்சாவையும் கைது செய்து எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார்களா என்றால் அப்போ வரவில்லை. அன்று இரவு வேறொரு நேரத்திலாவது எதிரியை எங்கள் வீட்டிற்கு போலிசார் அழைத்து வந்தார்களா என்றால் இல்லை. இது குறித்து எனது அப்பா புகாரை எப்போது காவல் நிலையத்தில் கொடுத்தா் என்றால் 6ம் தேதிக்கு அடுத்த நாள் 07.04.2023 அன்று காலை 06.00 மணிக்கு கொடுத்தார். புகார் கொடுத்த பிறகு தான் எதிரியை கைது செய்து எங்கள் வீட்டிற்கு போலிசார் அழைத்து வந்தார்களா என்றால் ஆமாம். 07.04.2023 அன்று புகார் கொடுத்த பிறகுதான் என்னையும், எனது அப்பா மற்றும் அக்காவை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் நான் தகவல் கொடுத்த அன்றே போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். புகாரில் புகார் கொடுத்த தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் தாரர் எனது தகப்பனார் என்பதாலும் இறந்தவர் எனது தாத்தா என்பதாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

**SC.NO.94/2023** **Date: 10.10.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திருமதி.பவித்ரா என்ற **Pw2** நபரின் வாக்குமூலம் (**1876**ம் ஆண்டின் **10** விதியின் **Tr.A.Pachiyappan, Junior Assistant,** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் – திரு.பவித்ரா

த/பெ, – கிருஷ்ணன்

வயது – **32/2025**

தொழில் – தனியார் நிறுவனத்தில் வேலை

முதல் விசாரணை:

நான் தற்போது சுங்குவார்சத்திரம், கருமாரியம்மன் கோயில் தெருவில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவத்தில் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன நபர் எனது தாத்தா கோவிந்தன். அரசு தரப்பு சாட்சிகளான கிருஷ்ணன், பவானி, குமாரி, சதீஷ், சரவணன் ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். **2012**ல் எனக்கு திருமணம் ஆனது. **2016**ல் எனது கணவரை பிரிந்து நான் எனது அப்பா வீட்டான நீர்வள்ளூருக்கு வந்துவிட்டேன். அதன் பிறகு சுங்குவார்சத்திரத்தில் வாடகை வீட்டில் வசித்தேன். எனது தங்கை பவானியும் எனதுடன் சுங்வார்சத்திரத்திற்கு வந்துவிட்டாள். அப்பா அம்மாவிற்கும் சண்டை வந்ததால் என்னுடைய சிறிய தங்கை மேனகாவும் எனது அம்மாவும் தனியே சென்றுவிட்டார்கள். எனது அப்பாவும் தாத்தாவும் மட்டும் நீர்வள்ளூர் கிராமத்தில் தனியாக வசித்து வந்தார்கள். **2023**ம் வருடத்தில் எனது அப்பாவிற்கு கால் உடைந்ததால் எதிரி பாட்சா எனது அப்பாவை அடிக்கடி பார்த்துவிட்டு செல்வார். எனது தாத்தா இறப்பதற்கு சுமார் **15** நாட்களுக்கு

முன்பு ஆஜர் எதிரி நீர்வள்ளூர் கிராமத்திற்கு எனது அப்பாவை பார்க்க வந்துள்ளார். ஆஜர் எதிரிக்கு கல்யாணம் செய்வதற்காக எனது அப்பாவிடம் பணம் கேட்டுள்ளார். அதற்கு எனது அப்பா தன்னிடம் தான் வீடு கட்டும் கான்ட்ராக் தான் பணம் உள்ளதாக சொன்னார். அதனால் தன்னிடம் பணம் இல்லை என்று சொன்னதால் ஆஜர் எதிரி கோபித்துக்கொண்டு சென்றுவிட்டான். 06.04.2023 அன்று எனது தாத்தா இறந்த அன்று எனது அப்பா வேலை முடித்து மாலையில் நானும் எனது அப்பாவை பார்ப்பதற்காக அவருக்கு போன் செய்துவிட்டு மாலை 06.00 மணிக்கு நானும் எனது தங்கையும் நீர்வள்ளூருக்கு சென்றோம். அப்போது எனது அப்பா வீட்டின் உள்ளே செல்லும் போது ஆஜர் எதிரி வீட்டிலிருந்து வெளியே வந்தான். சண்டைபோட்டு போன பிறகு இப்ப தான் வரே என்ன ஆச்சி என்று எனது அப்பா கேட்டதற்கு ஆஜர் எதிரி வேலை இருக்கு என்று சென்றுவிட்டான். தாத்தாவை பார்ப்பதற்காக தான் வந்ததாக சொன்னார். அப்பா எனது தாத்தாவை அழைத்துள்ளார். தாத்தா வெளியே வராததால் அப்பா பழைய வீட்டில் உள்ள ரூமிற்கு சென்று பார்த்துள்ளார். தாத்தா எழுந்துக்கவில்லை. வீட்டு சாவி மட்டும் கீழே விழுந்துகிடந்தது. தாத்தா எழுந்துக்கவில்லை, சாவி கீழே விழுந்து கிடக்கு என்று அப்பா வைத்திருந்த சாவியை வைத்து புது வீட்டை திறந்து பார்த்துள்ளார். நாங்கள் தாத்தாவை பார்த்த போது அவரி வாயில் புளு காலரில் தண்ணீர் மாதிரி வாயில் ஒழுகிக்கொண்டிருந்தது. அப்பா வீட்டின் கதவை சாவியை வைத்து திறந்து உள்ளே சென்று பார்த்த போது பெட்ரூமின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே இருந்த பீரோவும் உடைக்கப்பட்டிருந்தது. அப்பா கத்தி அழுதார், நாங்களும் உள்ளே சென்று பார்தோம். பீரோ உடைந்திருந்ததால் அப்பா ஐயோ ஐயோ என்று கத்தி

அழுதார். பிறகு எனது தங்கை போலிசாருக்கு இது குறித்து தகவல் சொன்னார். போலிசார் வந்து கைரேகை எடுத்தார்கள். வீட்டிற்கு யார் வந்து சென்றார்கள், யாரை பார்தீர்கள் என்று கேட்டார்கள். ஆஜர் எதிரி தான் நாங்கள் வீட்டிற்கு வரும் போது வெளியே சென்றான் என்று சொன்னோம். போலிசார் எதிரியை அழைத்து விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரி தான் சரக்கில் கொக்கு மருந்து கலந்து தாத்தாவிற்கு கொடுத்து தாத்தா அது குடித்தும் உயிரோடு இருந்ததால் கழுத்தை நெறுக்கி கொலை செய்துள்ளார். வீட்டில் இருந்த பணம் மற்றும் நகையை எடுக்க அவர் கொலை செய்துள்ளார். அடிக்கடி என்னை ஆஜர் எதிரி போன் செய்து எங்கே இருக்கிற என்று கேட்பான். நாங்கள் வீட்டில் இல்லாத சமயத்தில் தாத்தா மட்டும் தனியாக இருந்த நேரத்தில் தாத்தாவை கொலை செய்து வீட்டிலிருந்த பணம் மற்றும் நகையை எடுத்துள்ளான். இது சம்மந்தமாக காஞ்சி தாலுக்கா காவல் நிலையத்தில் எனது தகப்பனார் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவத்தன்று சம்பவம் குறித்து எனது தங்கை வழக்கறிஞர் பவானி என்பவர் போலிசாருக்கு போன் மூலம் தகவல் சொன்னார் என்றால் சரிதான். நான் 2020ம் வருடத்திலிருந்து சுங்குவார்சத்திரத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னோடு எனது குழந்தைகளும் எனது தங்கை பவானியும் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு இறக்கும் போது என்ன வயது என்றால் வயது 75. சம்பவத்தன்று நான் சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஓட்டலில் வேலை செய்து

கொண்டிருந்தேன் என்றால் அது என் அண்ணனின் ஓட்டல், நான் பார்த்துக்கொண்டிருந்து இருந்தேன். போலிசார் விசாரணையில் அது என்னுடைய அண்ணனின் ஓட்டல் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் அது குறித்து என்னிடம் விசாரணை செய்யவில்லை. நான் எனது அண்ணன் ஓட்டலில் மாத சம்பளத்திற்கு வேலை செய்கிறேனா என்றால் தினக்கூலி சம்பளம் பெறுகிறேன். பொதுவாக நான் காலை எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை எப்போது வீடு திரும்புவேன் என்றால் காலை 09.00 மணிக்கு சென்று மாலை 05.00 மணிக்கு வருவேன். எனது தாத்தா இறந்த விவரம் முதன் முதலில் போன் மூலம் யார் தகவல் சொன்னது என்றால் நாங்கள் அங்கு தான் இருந்தோம். எதிரி பாட்சா எனது அப்பாவிடம் எவ்வளவு பணம் எந்த தேதியில் கேட்டார் என்றால் தேதியும் தொகையும் எனக்கு தெரியாது, எனது அப்பாவிற்கும் அவனுக்கும் தான் தெரியும், எனது அப்பா பணம் கேட்டதாக சொன்னார். எதிரி பாட்சா பணம் கேட்ட விவரம் எனது அப்பா சொல்லி தான் தெரியும் என்றாலும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் யாரும் இல்லாத சமயத்தில் தான் எதிரி வீட்டிற்கு வந்து சென்றுள்ளார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் நாங்கள் இல்லாததை தெரிந்து தான் அன்று வீட்டிற்கு வந்துள்ளான். சம்பத்தன்று ஓட்டலிருந்து மாலை எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் 05.30 மணிக்கு கிளம்பினேன். சுங்குவார்சத்திலிருந்து நீர்வள்ளூருக்கு பேருந்தில் வந்தோமா அல்லது இருசக்கர வாகனத்தில் வந்தோமா என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தோம். எனது தாத்தாவை குளிர்சாதன பெட்டியில் வைப்பதற்கு முன்பு அவரின் கைகள் மடக்கிய நிலையில் விரைப்புடன் இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு மடக்கியிருந்த கைகளை முறையாக

சரி செய்த பிறகு குளிர்சாதன பெட்டியில் வைத்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று எத்தனை மணிக்கு போலிசார் வந்தார்கள் என்றால் 07.00 மணிக்கு மேல் வந்தார்கள். போலிசார் வரும் போது அவர்கள் மட்டும் வந்தார்களா அல்லது பாட்சாவையும் அழைத்து வந்தார்களா என்றால் போலிசார் மட்டும் தான் வந்தார்கள், விசாரணை செய்தார்கள். புகாரை மறுநாள் காலையில் தான் காவல் நிலையம் சென்று எனது அப்பா கொடுத்தார் என்றால் சரிதான். புகார் கொடுத்த நாள் 07.04.2023 என்றால் சரிதான். மறுநாள் போலிசார் புகார் கொடுப்பதற்கு முன்பு வந்தார்களா அல்லது புகார் கொடுத்தற்கு பிறகு வந்தார்களா என்றால் புகார் கொடுத்ததற்கு பிறகு வந்தார்கள். எதிரியை அடித்து கூட்டிவந்தார்கள். எத்தனை மணிக்கு அழைத்து வந்தார்கள் என்றால் தெரியவில்லை. 07.00 அல்லது 08.00 மணி இருக்குமா என்றால் இருக்கும். எதிரி என்ன பன்னினான் என்று அவனே செய்து காண்பித்தான். கௌபாரை எடுத்து எப்படி செய்தான் என்று செய்து காண்பித்தான். போலிசார் சம்பவத்தன்று இரவே என்னையும், என் தகப்பனாரையும் எனது தங்கை பவானியையும் விசாரணை செய்தார்களா என்றால் ஆமாம். புகார் தாரர் எனது தகப்பனார் என்பதாலும் இறந்தவர் எனது தாத்தா என்பதாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

**SC.NO.94/2023** **Date: 10.10.2025**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )

சாட்சியாகிய திரு.கிருஷ்ணன் என்ற **Pw1** நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் **Tr.A.Pachiyappan, Junior Assistant,** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்

செய்யப்படுகிறது.

பெயர் – திரு.கிருஷ்ணன்

த/பெ, – கோவிந்தன்

வயது – 54/2025

தொழில் – கொத்தனார்

முதல் விசாரணை:

நான் தற்போது காஞ்சிபுரம் வட்டம், நீர்வள்ளூர் கிராமம், சுண்ணாம்புகுட்டை தெரு, கதவு எண்.110 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த நபர் எனது அப்பா கோவிந்தன். அரசு தரப்பு சாட்சிகளான பவித்ரா, பவானி, குமாரி, சதீஷ், சரவணன் ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் நீர்வள்ளூரில் பல வருடமாக வாழ்ந்து வருகிறேன். கடந்த 2022ல் ஒரு வருடமாக ஆஜர் எதிரியை எனக்கு பழக்கம். சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பாக தனக்கு கல்யாணம் என்று ஆஜர் எதிரி என்னிடம் காசு கேட்டார். நான் கொத்தனார் கான்ட்ராக்டில் கூலி வேலை செய்த எனது முதலாளியிடமிருந்து பணத்தை வாங்கி வந்து வைத்துள்ளேன், அந்த பணம் கான்ட்ராக்ட் வேலை செய்வதற்கு வைத்துள்ளதாக ஆஜர் எதிரியிடம் கூறினேன். ஆகையால் அந்த பணத்தை தர முடியாது என்று சொல்லிவிட்டேன். அதன் பிறகு 06.04.2023 அன்று நான் வேலைக்கு முடித்து விட்டு மாலை 06.30 மணிக்கு வீட்டிற்கு வந்தேன்.

வீட்டிற்கு வரும்போது ஆஜர் எதிரி எனது வீட்டிற்கு வந்து போனார். ஏன் பார்த்தும் பார்க்காமல் போகிறாய் என்று நான் ஆஜர் எதிரியிடம் கேட்டேன். ஆஜர் எதிரி ஒரு பதற்றமாக அவசரத்தில் கிளம்பி ஓடிவிட்டான். நான் வீட்டை திறந்து பார்த்த போது எனது பெரிய வீடு பூட்டி இருந்தது. சிறிய வீட்டில் எனது அப்பா இருந்தார். அந்த வீட்டிற்கு என்னிடம் ஒரு சாவியும் எனது அப்பாவிடம் ஒரு சாவியும் உள்ளது. எனது அப்பா இருந்த சிறிய ரூமில் நான் பார்க்க சென்றேன். நான் பார்த்த போது அங்கு சாவி கீழே விழுந்திருந்தது. எனது அப்பாவை எழுப்பினேன். 06.30 மணி ஆனதால் விளக்கு போடாமல் இருந்தது. எனது அப்பா மயக்க நிலையில் இருந்தார். நான் உடனே அக்கம் பக்கம் உள்ளவர்களை அழைத்து பார்த்த போது அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன் பிறகு நான் இது குறித்து போலிசாருக்கு தகவல் சொன்னேன். அன்று இரவே போலிசார் எனது வீட்டிற்கு வந்தார். எனது அப்பாவை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். அன்றைய தினமே கைரேகை நிபுணர்கள் எனது வீட்டிற்கு வந்தார்கள். நான் வைத்திருந்த சாவியை வைத்து வீட்டை துறந்து பெட்ரூமிற்கு சென்று பார்த்த போது பெட்ரூம் கதவு பூட்டு உடைந்திருந்தது. அங்கிருந்த பீரோவும் உடைக்கப்பட்டிருந்தது. பீரோவிலிருந்த பணம் 5 லட்சமும், 15 சவரன் நகை இருந்தது. 5 லட்சம் பணத்திலிருந்து வீட்டு வேலை செய்வதற்க செலவு செய்தது போக மீதம் 3 லட்சத்து 69 ஆயிரத்து 800 அதில் இருந்தது. கழுத்தில் போடும் ஆரம் இரண்டு இருந்தது. இரண்டு சையின் இருந்தது. பிரேஸ்லெட் ஒன்று, ஒரு கம்மல், 4 மோதிரம் ஆகியவை இருந்தது. நான் பார்த்த போது மேறபடி நகைகள் மற்றும் பணத்தை எதிரி எடுத்து சென்றுவிட்டார். மேற்படி பணம் மற்றும் நகைகளை காவல்

துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். எனது அப்பாவிற்கு மதுவில் கொக்குமருந்து கலந்து அருந்த வைத்தும் அது குடித்தும் எனது அப்பா உயிரோடு இருந்ததால் கழுத்தை இறுக்கி எனது அப்பாவை எதிரி கொலை செய்துள்ளார். இது குறித்து காஞ்சி தாலுக்காவில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் **10**ம் வகுப்பு படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான், நான் சொல்லி தான் புகார் எழுதப்பட்டது. காவல் துறையினர் சொல்லி தான் இந்த புகாரை நான் எழுதினேன் என்றால் இல்லை. நான் சொல்லி புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல எனது மகள் பவனி என்பவர் எழுதினாள். எனது மகள் பவானி ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று நான் தகவல் கொடுத்து போலிசார் எத்தனை மணிக்கு எனது வீட்டிற்கு வந்தார்கள் சுமார் **08.30** மணிக்கு வந்தார்கள். போலிசார் எனது வீட்டிற்கு வந்து சென்ற பிறகு மறுநாள் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று எனது உறவினர்களுக்கு எனது அப்பா இறந்த விவரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். எனது அப்பா இறந்த விவரத்தை எதிரி பாட்சா குடும்பத்தாருக்கும் தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரியின்

குடும்பத்தார் எனக்கு பங்காளிகள் உறவு முறை என்றால் இல்லை, தூரத்து சொந்தம். புகாரில் தாமல் கிராமத்தை சேர்ந்த எனது பங்காளி சித்தப்பா வெங்கடேசன் மகன் பாட்சா என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். அவர் எனது தூரத்து சொந்தம். சம்பவம் குறித்து எதிரியின் வீட்டிற்கு சொன்ன பிறகு பாட்சா எனது வீட்டிற்கு வந்தாரா என்றால் போலிசார் வந்தார்கள். சம்பவத்தன்றே பாட்சாவை கைது செய்துவிட்டார்களா என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் கைது செய்யவில்லை, விசாரிக்க கூட்டி சென்றார்கள் என்று கூறுகிறார். சம்பவத்தன்று இரவே பாட்சாவை காவல் நிலையம் அழைத்துவிட்டார்கள் என்றால் அழைத்து சென்றுவிட்டு மறுநாள் காலையில் திரும்பவ வீட்டிற்கு அழைத்து வந்து விசாரணை செய்தார்கள். எப்படி நடந்தது, ஏது நடந்தது என்று விசாரணை செய்தார்கள். திரும்ப அழைத்து வந்தார்கள் என்று நான் சொல்கிறேனா அது எத்தனை மணியளவில் என்று கேட்டால் 8 மணி. 8 மணி என்று நான் சொல்வது காலை 8 மணி. சம்பவத்தின் அன்று எனது தகப்பனார் இறந்த பிறகு எனது தகப்பனாரின் உடலை குளிர்சாதன கண்ணாடி பெட்டியில் வைத்தோம் என்றால் வைத்தோம். போலிசார் வந்து உடனே எடுத்து சென்றுவிட்டார்கள். 5 நிமிடம் கூட இருக்காது. அந்த பெட்டியில் வைப்பதற்கு முன்பு மடக்கியிருந்த கைகளை நீட்டி வைத்தீர்காளா என்றால் கழுத்து மட்டும் திரும்பி இருந்தது, அதை சரி செய்து வைத்தோம். எனது தகப்பனார் இறந்த சமயத்தில் வயது 75 இருக்கும். புகாரில் எதிரி பாட்சா 15 நாட்களுக்கு முன்பு எனது வீட்டிற்கு வந்து என்னிடம் பணம் கேட்டதாகவும் அதற்கு நான் தரமறுத்ததாகவும் அங்கிருந்து பாட்சா போய்விட்டார் என்றும் அதிலிருந்து வரவேஇல்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்,

சம்பவத்தன்று வந்தான். 23.03.2023 அன்று வீட்டிற்கு வந்தததோடு சரி அன்றிலிருந்து எதிரி எனது வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் தான் பார்க்கிறேனே. நான் எனது அப்பா இறந்த அன்று எதிரி என் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன். அப்போது எந்த கலர் பேன்ட், சட்டை ஆகியவைகளை எதிரி அணிந்திருந்தார் என்று கேட்டால் எனது அப்பா இறந்து சூழ்நிலையில் அதையெல்லாமா பார்ப்பாங்க. புகாரில் சம்பவதன்று மாலை 06.30 மணிக்கு எதிரி பாட்சி எனது வீட்டிலிருந்து வந்துட்டு வெளியே செல்லும் போது எந்த ஒரு பொருட்களையும் எதிரி கையில் வைத்திருந்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று பூட்டி வைத்திருந்த புதிய வீட்டின் சாவியை எடுத்து கதவை திறந்து பெட்ரூமை பார்த்தேன் அப்போது தான் யாரோ பீரோவை உடைத்திருந்தது எனக்கு தெரிய வந்தது என்றால் ஆமாம். எனது அப்பா இறப்பதற்கு முன்பு எத்தனை வருடங்களான எனது அம்மாவை விட்டு பிரிந்திருந்தார் என்று கேட்டால் 25 வருடம் இருக்கும். எனது அம்மாவை விட்டு பிரிந்திருந்த காரணத்தினால் மன வேதனையாலும் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் தான் இறந்தார் என்றால் இல்லை. எதிரிர பாட்சா குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் முன் பகை இருந்ததா என்றால் இல்லை. யாரோ செய்த குற்றத்திற்காக எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் தவறு.

(மறு விசாரணை இல்லை)